DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Cr.P.C/XXV BNSS)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, KUMBAKONAM

| | | |
|---|---|---|
| Case No. | : | C.C No. 380 /2023 |
| Deposition of witness | : | PW-8 |
| Name | : | பேபி |
| Father's /Husband Name | : | முருகன் |
| Village | : | மேட்டூர் |
| Taluk | : | சேலம் |
| Age | : | 56 |
| Occupation | : | காவல் ஆய்வாளர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 10th day March 2025.

Accused absent and petition U/sec. 317 Cr.P.C (355 BNSS) filed and allowed. App and defense counsel present.

**முதல் விசாரணை:–**

நான் தற்போது சேலம் மாவட்டம் மேட்டூர் காவல் பயிற்றி பள்ளியில் பணிபுரிந்து வருகிறேன். கடந்த 27.08.2022ம் தேதி கும்பகோணம் மேற்கு காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியிலிருந்தபோது உதவி ஆய்வாளர் ராஜேஷ் கண்ணன் பதிவு செய்த மேற்கு காவல் நிலைய குற்ற எண். 704/2022, சட்டப்பிரிவுகள் 380, 457 இதச–ன் கீழான வழக்கினை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவயிடமான காடுசெட்டு தெரு, ஸ்ரீசாய் இல்லம் சென்று சாட்சிகள் தாராசிங், கார்த்திகேயன் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் வரைந்தேன் **(அவை முறையே அ.சா.ஆ.7 மற்றும் அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**. பின்னிட்டு சாட்சிகள் பேபி, லலிதா, சிவசங்கர், கணேசன், முத்துலட்சுமி மற்றும் பார்வை மகசர் சாட்சிகளை விசாரணை செய்து தனிதனியே வாக்குமூலம் பதிவு செய்தேன்.

2. சம்பவம் உண்மையென தெரியவர எதிரி தேடியபோது 02.09.2022ம் தேதி 16.00 மணிக்கு கும்பகோணம் புதிய பேருந்து நிலையம் அருகே சந்தேகத்தின்பேரில் எதிரியை காவல் நிலையத்திற்கு அழைத்து வந்தேன். காவல் நிலையத்தில் 16.30 மணிக்கு எதிரியை காரணம் கூறி கைது செய்து சாட்சிகள் அகஸ்டின் ஞானராஜ், சிவகுமார் முன்னிலையில் எதிரி தாமாக

முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் எதிரி ஆஜர் செய்த தடயபொருட்களான 1. தங்க ஆரம் சுமார் 40.400 கிராம் ஒன்று, 2. தங்க ஆரம் சுமார் 23.910 கிராம் ஒன்று, 3. தங்க நெக்லஸ் சுமார் 23.610 கிராம் ஒன்று, 4. தங்க காசு மாலை நெக்லஸ் சுமார் 23.530 கிராம் ஒன்று, 5. தங்க பிரேஸ்லெட் சுமார் 8.190 கிராம் ஒன்று, 6. தங்க பிரேஸ்லெட் சுமார் 6.300 கிராம் ஒன்று, 7. தங்க மோதிரம் சுமார் 3.490 கிராம் ஒன்று, 8. தங்க மூக்குத்தி சுமார் 0.570 கிராம் இரண்டு, 9. தங்க மோதிரம் சுமார் 6.200 கிராம் ஒன்று, 10. தங்கதோடு தொங்கல் சுமார் 4.80 கிராம் ஒன்று, 11. தங்க சைடு காது தோடு சுமார் 1.50 கிராம் ஒன்று, 12. தங்க தோடு ஜிமிக்கி சுமார் 7.500 கிராம் ஒரு ஜோடி, 13. தங்க மூக்குத்தி சுமார் 0.820 கிராம் ஒன்று, 14. தங்க டாலர் சுமார் 1.950 கிராம் ஒன்று, 15. தங்க சைடு காது தோடு சுமார் 0.410 கிராம் ஒரு ஜோடி, 16. தங்க இதர உதிரிகள் சுமார் 0.290 கிராம், 17. கவரிங் கல் நெக்லஸ் சுமார் 29.710 கிராம் ஒன்று, 18. கவரிங் கல் நெக்லஸ் சுமார் 33.320 கிராம் ஒன்று, 19. கவரிங் ஆரம் சுமார் 34.770 கிராம் ஒன்று, 20. கவரிங் சிகப்பு கல் நெக்லஸ் சுமார் 27.630 கிராம் ஒன்று, 21. கவரிங் வெள்ளை கல் நெக்லஸ் சுமார் 35.300 கிராம் ஒன்று, 22. கவரிங் டாலர் நெக்லஸ் சுமார் 31.630 கிராம் ஒன்று, 23. கவரிங் கல் வைத்த தோடு சுமார் 10.500 கிராம் ஒன்று, 24. கவரிங் மோதிரம் சுமார் 4.090 கிராம் ஒன்று, 25. கவரிங் கடுக்கன் சுமார் 2.50 கிராம் ஒன்று, 26. வெள்ளிக்கொலுசு சுமார் 50.300 கிராம் ஒரு ஜோடி, 27. வெள்ளி இதர உதிரிகள் சுமார் 20.560 கிராம், 28. சில்வர் நெக்லஸ் சுமார் 9.200 கிராம், 29. முக்கோண வடிவ சாதா கல் ஒன்று, 30. சாவி ஒன்று, 31. ஆனந்தம் சில்க்ஸ் கட்டைப்பை ஒன்று ஆகியவற்றை அதே சாட்சிகள் முன்னிலையில் 18.30 மணிக்கு மகஜரில் கைப்பற்றினேன்.

3. மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி மற்றும் கைப்பற்றுதல் மகசர் முறையே **அ.சா.ஆ.9, அ.சா.ஆ.10** ஆக குறியீடு செய்யப்படுகிறது. எதிரியை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன். தடயபொருளை படிவம் 91 ல் நீதிமன்றத்தில் ஆஜர் செய்துள்ளேன். மேற்படி படிவம் 91(CP No.115/2022) முறையே **அ.சா.ஆ.11**ஆக குறியீடு செய்யப்படுகிறது. சாட்சிகள் அகஸ்டின் ஞானராஜ், சிவகுமார் ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். விசாரணையின் அடிப்படையில் எதிரி அதே வீட்டில் வேலை செய்வதால் சட்டப்பிரிவுகளை அறிக்கை மூலம் மாற்றம் செய்தேன். **(அந்த சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.12 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**. முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த உதவி

ஆய்வாளர் ராஜேஷ்கண்ணா அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் எதிரி மீதான விசாரணையை முடித்து குற்ற இறுதியறிக்கையை சமர்பித்துள்ளேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–**

புகாரில் 48 பவுன் நகைகள் காணாமல் போனததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் கைப்பற்றியது 19 1/2 தங்க நகைகள் என்றால் சரிதான், இதர எடை கவரிங் மற்றும் வெள்ளியில் கைப்பற்றியுள்ளேன். புகாரில் கவரிங், வெள்ளி நகைகள் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். புகாரில் ஆரம்–2, நெக்லஸ்–2, வளையல்–2, கைசெயின்–3, மோதிரம்–10, செயின்–3, தோடு–6 செட்டு, மூக்குத்தி–6 காணாமல்போனதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையில் காலம்–3ல் சம்பவம் நடைபெற்றது 26.08.2022 அன்று 20.45 மணி முதல் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். புகாரின்படி சம்பவம் நடைபெற்றது 26.08.2022 அன்று மாலை 06.15 – 08.45 என்றால் சரிதான்.

2. காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்தது 27.08.2022 அன்று காலை 08.00 மணிக்கு என்றால் சரிதான். சம்பவயிடத்திலிருந்து காவல் நிலையம் சுமார் 2 கி.மீ தூரம் இருக்கும். எவ்வளவு நேரத்தில் வரலாம் என்றால் போக்குவரத்தை பொறுத்து செல்லும்நேரம் மாறுபடும். காலதாமதமாக புகார் கொடுத்ததற்கு குறிப்பிட்டு காரணம் உள்ளதா என்றால் வாதியால் தாமதம் என குறிப்பிடப்பட்டுள்ளது. முதல் தகவல் அறிக்கையில் காலம் 9ல் களவான பொருட்களின் மதிப்பு குறிப்பிடவில்லை என்றால் சரிதான், மதிப்பு தெரியாததால் குறிப்பிடவில்லை. தடயபொருட்களின் மதிப்பு குறித்து மதிப்பீட்டாளர் வைத்து அளவிடவில்லை என்றால் சரியல்ல. முதல் தகவல் அறிக்கை காலம் 14ல் குற்ற முறையீட்டாளர் கையொப்பம் பெறவில்லை என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கை காலம் 15ல் நீதிமன்றத்திற்கு 27.08.2022 அன்று அனுப்பப்பட்டதாக உள்ளது என்றால் சரிதான். 03.09.2022 அன்று 12.05 மணிக்கு முதல் தகவல் அறிக்கை நீதிமன்றத்தில் பெறப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி காலதாமதத்திற்கு குறிப்பிட்ட காரணம் கிடையாது என்றால் சரிதான்.

3. அ.சா.1ன் வீட்டுக்கு முன்பு உள்ள CCTV பதிவுகளை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 27.08.2022 அன்று மட்டும் அ.சா.1யை

நான் விசாரித்தேன் என்றால் சரியல்ல, 2–3 முறை விசாரித்தேன், தேதி நினைவில்லை. தடயபொருளான item 30 சாவியை தனியார் சாட்சிகள் முன்னிலையில் அ.சா.1ன் பூட்டுடன் ஒப்பிட்டு பார்த்தேனா என்றால் இல்லை. CCTV பதிவுகளை தாக்கல் செய்தால் உண்மை தெரிய வரும் என்பதால் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

4. நான் சொல்லும் நாள் நேரம் இடத்தில் புகார் பெறப்படவில்லை என்றாலும், சம்பவயிடம் செல்லவில்லை என்றாலும், சாட்சிகளை விசாரிக்கவில்லை என்றாலும், எதிரியை கைது செய்யவில்லை என்றாலும், தடயபொருள் எதுவும் கைப்பற்றவில்லை என்றாலும் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல. எதிரி அ.சா.1ன் வீட்டில் வேலை செய்ததற்கு ஆவணம் தாக்கல் செய்தேனா என்றால் அதற்கு ஆவணம் இல்லை, அக்கம்பகத்தில் உள்ள நபர்களை விசாரித்து தெரிந்து கொண்டேன். அந்த நபர்களின் பெயர் என்னவென்றால் கணேசன். அ.சா.1ன் வீட்டில் எதிரி வேலை செய்யவில்லை என்றாலும், நான் சரிவர விசாரிக்காமல் எதிரி மீது தவறாக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

Taken down by the typist under my dictation in open Court read over to the witness admitted and acknowledged by him to be Correct.

Sd./-M.Elavarasi,
Judicial Magistrate No.I,
Kumbakonam.